பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூதஹு மாசி ௴ 19 உ ஞாயிற்றுக்கிழமை (03-03-1991) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 96

# குண்டுவெடிப்பில் ரஞ்சன் பலி!

# அரசு வட்டாரங்கள் அதிர்ச்சி!!

## அமைச்சரின் வாகன அணி சிதறியதில் படை அதிகாரிகள், பொதுமக்கள் மரணம்

கொழும்பு, மார்ச் 3

கொழும்பு ஹவ்லக் வீதியில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு இடம் பெற்ற பெரும் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில். ஸ்ரீலங்காவின் பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்னா மரணமானார்.

அவர் சென்ற வாகன அணி குண்டில் சிக்கி முற்றாகச் சிதறியது. இதனால் வாகன அணியில் சென்ற அமைச்சரின் உதவியாளர்களும் மற்றும் படை அதிகாரிகளும் மற்றும் பொது மக்களும் உயிரிழந்தனர்.

பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டிருக்கும் கொழும்பு மாநகரின் மையப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றிருப்பது அரசு வட்டாரங்களிலும், தென்பகுதி மக்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

ஹோட்டன் பிளேஸில் உள்ள தமது வீட்டில் இருந்து பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்துக்கு அவர் சென்று கொண்டிருந்த சமயம் அவரது வாகன அணி [Motorcade] குண்டு வெடிப்பில் சிக்கிச் சிதறியது.

சம்பவம் நடந்த இடம் இதனால் ரணகளமானது.

அமைச்சர் ரஞ்சனின் சடலம் உட்பட பல சடலங்கள் எரிந்து உருக்குலைந்த நிலையில் காணப்பட்டன,

அமைச்சரின் வாகன அணியில் சென்ற அவரது கார் மற்றும் சில பாதுகாப்பு படையினரின் வாகனங்கள், அருகில் சென்று கொண்டிருந்த தனியார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பனவும் குண்டு வெடிப்பால் நாசமாகின.

அருகில் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று தீப்பிடித்து எரிந்தது. அதில் பயணம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ரஞ்சனின் எரிந்த சடலம் ஆஸ்பத்திரி சவச்சாலையில்

அமைச்சர் ரஞ்சன் சென்ற கார் குண்டு வெடிப்பால் முற்றாகச் சிதைந்து எரிந்து போய்க் காணப்பட்டது.

ரஞ்சன் மற்றும் அவருடன் காரினுள் இருந்த ஐந்து பேரினதும் சடலங்கள் அடையாளம் காணப்பட முடியாதவாறு எரிந்து போய்க் கிடந்தன.

அமைச்சரின் உடல் உட்பட கருகிய உடல்கள் அனைத்தும் கொழும்பு அரசு ஆஸ்பத்திரிச் சவச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. காயமடைந்த 73 பேர் அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

## ஜெனரல் அந்தஸ்து

உயிரிழந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கேர்ணல் தரத்தில் இருந்து ஜெனரல் தரத்துக்கு ஜனாதிபதி பிரேமதாஸாவால் பதவி உயர்த்தப்பட்டார்.

அவர் இறந்த பின்னர் அவருக்கு இப்பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியவற்றுக்கு உழைத்ததற்காக இப் பதவி உயர்வு வழங்கப்படுவதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்து உள்ளது. [உ-எ]

## இராணுவ மரியாதைகளுடன் இறுதிக் கிரியை நடக்கும்

கொழும்பு, மார்ச் 3

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் இறுதிக் கிரியைகள் முழு இராணுவமரியாதைகளுடன் எதிர்வரும் புதன் கிழமை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறும்.

இதனைக் கவனிப்பதற்காக அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா தலைமையில் குழு ஒன்றை ஜனாதிபதி பிரேமதாஸா நியமித்திருக்கிறார். [உ-எ]

## புதன் தேசிய துக்கதினம்

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் இறுதிக் கிரியைகள் நடைபெறும் புதன் கிழமை தினம் ஸ்ரீலங்கா அரசினால் தேசிய துக்க தினமாகப் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது.

அன்றைய தினத்தை பொது விடுமுறை தினமாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

[உ-எ]

## கொழும்பு நகர் அதிர்ந்தது!

ஹவ்லக் வீதிக் குண்டு வெடிப்புச் சத்தம் கொழும்பில் பல மைல் தூரம் கேட்டதாகவும் —

கொழும்பு நகரை அது அதிரவைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் இருந்த கட்டடங்களின் கண்ணாடிகள்கூட இந்தக் குண்டு வெடிப்பினால் சிதறின.

வெள்ளை நிறக் கார் ஒன்றின் கதவு சம்பவம் நடந்த இடத்துக்குச் சற்றுத் தள்ளி தந்திக் கம்பத்தின் உச்சியில் தொங்கிக்கொண்டிருந்தது.

## ஜனாதிபதி பிரேமதாச நேரில் சென்று பார்த்தார்

ஹவ்லக் வீதியில் நேற்றுக் காலை குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்தை ஜனாதிபதி பிரேமதாஸா, சம்பவம் நடந்த சற்றுநேரத்தில் சென்று பார்வையிட்டார்.

அதன் பின்னர் கொழும்பிலுள்ள அமைச்சர் ரஞ்சனின் இல்லத்துக்குச் சென்று அவரது மனைவியிடம் ஆறுதல் கூறினார்.

## விசாரணை நடத்துமாறு ஐ. ஜி. பிக்கு உத்தரவு

நேற்றுக் காலை இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் பற்றி நேரடியாக விசாரணை நடத்துமாறு பொலீஸ் மா அதிபரை [ஐ. ஜி. பி] ஜனாதிபதி பணித்துள்ளார்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வீதியில் சென்றோர் காயம்

நேற்றுக் காலை கொழும்பு, ஹவ்லக் வீதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது வீதியால் சென்று கொண்டிருந்த பலர் படுகாயமடைந்தனர்.

மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில்—ஜனநெரிசல் மிக்க இடத்தில் — பொலீஸ் பார்க் சந்தியில்—இக்குண்டு வெடித்தது.

இதனால் அப்பகுதியில் பல கடைகளும் நாசமாகின.

## குண்டு வெடிப்பு பற்றி முரணான தகவல்கள்!

அமைச்சர் ரஞ்சன் சென்ற வாகன அணி கண்ணிவெடியில் சிக்கி சிதறியதா அல்லது வாகனக் குண்டுக்கு இலக்கானதா என்பது குறித்து முரண்பாடான தகவல்கள் முதலில் வெளியாகின.

''ரிமோட் கண்ட்ரோல்'' முறையில் இயக்கப்பட்ட நிலக் கண்ணி வெடித்ததால் வாகன அணி முற்றாக அழிந்தது என்று இந்திய வானொலி தனது கொழும்புச் செய்தியாளரை மேற்கோள்காட்டி அறிவித்தது.

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்றில் குண்டு வைக்கப்பட்டிருந்ததாகவும் —

அக்குண்டே ''ரிமோட் கண்ட்ரோல்'' முறையில் வெடிக்க வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

## ரஞ்சனின் காரில் இருந்த குண்டே வெடித்தது?

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா சென்றுகொண்டிருந்த காரில் வைக்கப்பட்ட குண்டு வெடித்தே அவர் கொல்லப்பட்டார் என்று ஏ. எப். பி. செய்தி ஸ்தாபனம் அறிவித்து உள்ளது.

அமைச்சரின் காருக்குள் வைக்கப்பட்ட குண்டு வெடித்து, அமைச்சரின் கார்ச் சாரதி, அமைச்சரின் மெய்ப் பாதுகாவலர்கள் மற்றும் அமைச்சருடன் காரில் சென்ற கடற்படை அதிகாரி ஆகியோரும் கொல்லப்பட்டனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## உயிரிழந்தோர் குறித்து மாறுபட்ட செய்திகள்

அமைச்சர் ரஞ்சன் உயிரிழந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மரணமானோரின் எண்ணிக்கை குறித்து நேற்று மாறுபட்ட தகவல்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

உயிரிழந்தோரின் எண்ணிக்கை 50 ஆக இருக்கலாம் என்று கொழும்பில் உள்ள தமது செய்தியாளரை ஆதாரம் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



சனியன் மாறியது உவருக்குச் சரியில்லைப் போலை...!

இன்றைய உதயனில் பிரசுரமாகி உள்ள செய்திகள் சில, நேற்று வெளியான விசேட பதிப்பிலும் இடம் பெற்றிருந்தன என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

ஆனந்தா கலண்டர் 1991 ஆங்கில, தமிழ் திகதிகளும் சகல விரதநாட்களும், அட்டமி, நவமி, அரசாங்க விடுமுறைகள், விஷேட தினங்கள் யாவும் அடங்கியது, ரூபா 22/- எங்கும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். [15985]

### தேவை

கிளிநொச்சி நகரில் நன்கு ஸ்தாபிக்கப்பெற்ற ஆங்கில வைத்தியசாலைக்கு அனுபவமும், திறமையும் உள்ள தாதிகள் தேவை. சிறந்த சம்பளமும், இருப்பிட வசதியும் தரப்படும். நேரிலோ கடித மூலமோ விண்ணப்பிக்கவும். வைத்திய அதிகாரி, சாந்தி வைத்தியசாலை, கிளிநொச்சி. [15988]

### தேவை

பாலர் வகுப்பிலிருந்து A/L வரை தங்களால் இயன்ற பாடங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. ஆண்டு 6லிருந்து ஆண்டு 11 வரைக்குமுள்ள கணித பாடத்திற்கு விடை தயாரிப்பதற்கு ஆட்கள் தேவை. மாலை 2-00—3-00 ற்குள் நேரடியாகச் சந்திக்கவும் ஆறுமுகநாதன், 10. கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [16011]

### நோவு எண்ணெய்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ். ரி மெடிக்கல்ஸ். 490 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [16014]

### சாயிராம்

சத்திய சாயிபாபா வாக்கின் படியே அவருடைய முன்னைய அவதாரம் ஷீரடி சாயிபாபா வாழ்க்கை இரகசியங்கள் வழங்குவோர் ஞானயக்ஞம் 388/1. பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம், [16010]

### புத்தகங்கள்

வர்த்தகமும், நிதியும் 1 [உயர்தரவகுப்புகளுக்குரியது] ஆக்கம் தே. ஜெயராமன் B. com, M. B. A. [விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம்] விலை ரூபா 48/ – வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-5785]

### சனி மாற்றம்

புத்தாண்டுப் பலன்கள் சனி மாற்றம், பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் மறுபிறவி [பிரேமசாயிபாபா] அவதாரம் [2033 இல்] அடங்கியவை விலை 6-00/- எங்கும் விற்பனையாகிறது. நூல்களுக்கும், ஜோதிட ஆலோசனைகளுக்கும் Prof. சத்தியதாசன் ஞானம்ஸ் ஸ்ரோர்ஸ், சித்தன் கேணி. [16017]

### மணமகன் தேவை

28 வயதுடைய றோமன் கத்தோலிக்க ஆசிரியைக்கு அரச உத்தியோக மணமகன் தேவை. மணமுடிக்காத சகோதரன் ஒருவரும் உண்டு. திருவிளங்கம, 16/16, வளன்புரம். சொழும்புத்துறை, புதிய மாங்கல்யா மல்ரி சேர்விஸ். [16016]

### நல்லினப் பசு விற்பனை

ஐந்து நல்லினப் பசுக்களும், மூன்று கன்றுகளும் விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர், மேலதிக விவரங்களுக்கு சங்க காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி-5807]

### மீரா வெளியீடுகள்

வித்தியாசமான கதைகளில், கருத்தில் கன்னித் தமிழ் உரையாடலில் சிறந்த நாவல்கள். தலைசிறந்த எழுத்தாளர்கள் எழுதியது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம்' திருக்கணிதம் சாவகச்சேரி, பிக்பென்ஸ் [B] கிளிநொச்சி. யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும். [15987]


## பத்திரிகை டிப்ளோமா நெறி

கொழும்பு, மார்ச் 3
பத்திரிகை டிப்ளோமா நெறி ஒன்றை நடத்த திறந்த வெளி பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

ஜீ.சி.ஈ. [சாதாரணதரப் பத்திரப்பரீட்சையில் 6பாடங்கள் சித்தி எய்தியுள்ளதுடன் 2 வருட பத்திரிகை அனுபவம் உள்ளவர்கள் அல்லது பத்திரிகைத்துறையில் 3 ஆண்டு அனுபவம் உள்ளவர்கள் இந்த டிப்ளோமா நெறிக்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


## ஒத்து மாறல்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு ஒத்து மாற விரும்பும் விஞ்ஞான ஆசிரியர் தொடர்பு கொள்ளவும்.

விவரங்களுக்கு
184, C/o உதயன், யாழ்ப்பாணம்.
[16015]



## கண்ணீர் அஞ்சலி

### சின்னராசா செல்வமலர்

28-02-1991இல் எம்மை விட்டுப் பிரிந்த கண்டி வீதியில் உள்ள பென்ரிக்கோஸ் தேவாலயத்தைச் சேர்ந்த விசுவாசி கே. கே. சின்னராசாவின் மகள் செல்வமலருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

01-03-91இல் நடந்த அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தந்தை கே. கே. சின்னராசா
[அரச வடிசாலை, யாழ்ப்பாணம்]
தாய், மக்கள்,
சகோதர, சகோதரிகள்.

16/1 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். [16019]


## பனை தறிக்க கட்டுப்பாடு

மானிப்பாய், மார்ச் 3
அனுமதி இன்றி பனை மரங்கள் தறிப்பதைக் கட்டுப்படுத்த தமிழீழ ஆய்வு நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ள உள்ளது.

இதன் அடிப்படையில் பனைகளை தறிப்பதற்கு சிபார்சு செய்யும் பொறுப்பு கிராமிய உற்பத்திக் குழுவிடம் ஒப்படைக்கப் பட உள்ளது.

கிராமிய உற்பத்திக் குழுக்கள் உபயோகமற்ற பனைகளை அடையாளம் இட்டு பட்டியல் போட்டு அதனை கிராமிய உற்பத்திக் குழு இணைப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

கமநல சேவை நிலைய பிரதேசம் உள்ளடக்கிய பனைகள்பற்றிய பட்டியலை இணைப்பாளர் பிரதேசப் பொறுப்பாளரிடம் ஒப்படைப்பார்.

பனை மரங்கள் தேவைப்பட்டோரும், துலாக்கள் செய்ய, பதுங்கு குழிகள் மூட மற்றும் வீட்டுத் தேவைகளுக்கு பனை தேவைப்பட்வர்களும் அனுமதி பெற்று, அடையாளம் இடப்பட்ட மரங்களை தறிக்க, அல்லது விற்பனை செய்ய முடியும்.

தறிக்கப்படும் பனைகளுக்குப் பதிலாக புதிய பனைகளை நடும் திட்டத்தையும் தமிழீழ ஆய்வு நிறுவனம் மேற்கொள்ள இருக்கிறது. [இ – 90]

## பாடசாலைகள் இருநேரம்

கொழும்பு, மார்ச் 3
நாளை திங்கள் முதல் சகல பாடசாலைகளும் இரு நேரப் பாடசாலைகளாக இயங்கும்.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி கிண்ணியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில்நடந்த கூட்டத்தில் பேசுகையில் இத்தகவலைத் தெரிவித்தார். [ஒ–எ]

## புகையிலை செடியில் இலைச்சுருட்டி

மானிப்பாய், மார்ச் 3
மானிப்பாய், தாவடி, இணுவில், உடுவில் போன்ற இடங்களில் செய்கைபண்ணப்பட்டுள்ள புகையிலைச் செடிகளை இலைச்சுருட்டி நோய் வெகுவாகப் பாதித்துள்ளது. புகையிலைச் செடியின் இலைகள் சுருண்டு அவை நீண்டு வளராமல் காட்சி அளிக்கின்றன.

புகையிலை நாற்று மேடைகள் அமைக்கும் காலங்களில் பெய்த மழையும், போதிய உரவகைகள் இல்லாததுமே இலைச்சுருள் நோய் ஏற்படக் காரணமாக இருக்கலாம் என புகையிலைச் செய்கையாளர்கள் கருதுகின்றனர். [இ-90]

## பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தினால் 1989 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட விஞ்ஞானத்துறை [கணிதம், மதிப்பீட்டியல், விலங்கியல்] சிறப்புப் பட்டதாரிப் பரீட்சைகள் திங்களன்று வெளியிடப்பட்டன.

கணிதப் பிரிவில் மொத்தம் ஏழு பேர் சித்தியடைந்துள்ளனர். அவர்களில் இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தி எய்திய செல்வி எஸ். ரஞ்சினிக்கு சேர் அருணாசலம் மகாதேவா நினைவுப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டியல் பிரிவில் ஐந்து பேர் சித்தியடைந்துள்ளனர்.

விலங்கியல் பிரிவில் 4 பேர் சித்தி பெற்றுள்ளனர். அவர்களில் கே. ஜெயசிங்கம் என்பவர் ஸ்ரீசங்கரப்பிள்ளை பரராஜசிங்கம் புலமைப் பரிசிலைப் பெறுகிறார். [அ]

## வேலை ஆரம்பம்

பருத்தித்துறை, மார்ச் 3
பருத்தித்துறை துறைமுகக் கடலில் மூழ்கிய புல்டோசர் கடந்த 27 ஆம் திகதி வெளியே எடுக்கப்பட்டு மீண்டும் துறைமுகத்தில் அகழ்வு வேலைகள் ஆரம்பமாகி உள்ளன. [இ-118]

## மீனவர்களுக்கு நிவாரணம்

காங்கேசன்துறை, மார்ச் 3
இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட மீனவர்களுக்குநிவாரணம் வழங்கப்பட உள்ளது.

1983ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட மீனவ முத்திரை கடல்வலய நிவாரணப் பத்திரம் போன்றவற்றை வழங்குமாறு மயிலிட்டி கிராமிய கடற்தொழில் சமூக அபிவிருந்தி அமைப்பு ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியிருந்தது.

இந்த அமைப்பின் செயலாளர் திரு. செ. தனபாலசிங்கத்துக்கு ஜனாதிபதியின்செயலாளர் அனுப்பியுள்ள பதிலிலேயே நிவாரணம் வழங்கப்பட இருப்பது குறித்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [இ-68]

## நூல் நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச்-3
ஈச்சமோட்டை சன சமூக நிலைய நூல் நிலையத் திறப்பு விழாவும், மரம் நடும் விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல்2-00மணிக்கு நடைபெறும். [இ]

## மீள் பரிசீலனை செய்ய முடிவு

யாழ். மாவட்டத்தில் நிவாரண அட்டைகள் வைத்திருப்போர் குறித்து மீள்பரிசீலனை செய்ய செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

யாழ். மாவட்டத்தில் உலர் உணவு நிவாரணம் பெறுவதற்கென 2 லட்சத்து 42 ஆயிரம் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ–3]

## கருத்தரங்குகள்

பருத்தித்துறை, மார்ச் 3
கனிஷ்ட தொழில்நுட்பச் சான்றிதழ்ப் பரீட்சைப் பாடநெறித் தெரிவு தொடர்பான கருத்தரங்குகளை யாழ். கல்விப் பணிமனை நடத்தி வருகிறது.

நாளை 4 ஆம் திகதி பண்டத்தரிப்புக் கோட்டத்திற்கான கருத்தரங்கு, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும், 6 ஆம் திகதி வேலணைக் கோட்டத்திற்கான கருத்தரங்கு சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறும் என யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் தெரிவித்தார். [இ-118]


## கண்ணீர் அஞ்சலி

### கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
(Retired Electrical Engineer)

He lives in the loving hearts of all
Who serves the truth Serene in soul.
— Divine Thirukural

அமரர் க. மயில்வாகனத்தின் இறுதியாத்திரையில் இன்று கலந்து கொள்ள முடியாதவர்கள், உங்கள் இருப்பிடத்தில் நண்பகல் 12மணிக்கு 2நிமிட மௌன அஞ்சலியில் அவரின் நற்பண்புகளை நினைந்து அவரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போம்.

தெய்வீக திருக்குறள் மன்றம்,
திருமூலர் மன்றம்,
[16021] யாழ். வாசகர் மன்றம், Y.M.D.A.



## மரண அறிவித்தல்

### நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
[முன்னாள் M. D. குணசேனா, பிரதம கணக்காளர்]

நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை [M. D. குணசேனா முன்னாள் பிரதம கணக்காளர்] 24-2-1991 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தருமர் நீக்கிலாப்பிள்ளை ஞானப்பு தம்பதிகளின் அன்பு மகனும், மரியரெத்தினத்தின் அன்புக் கணவரும், திருமதி றெஜீனா ரிறேரன் B.A. Hons L.L B., [சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிஸ், நியாயத்துரந்தர் Solicitor - London], அன்ரன் பேட்றம் [பொறியியலாளர்-கனடா], திருமதி கில்டா ஞானசேகரம் [தட்டெழுத்தாளர்-கொழும்பு], திருமதி டாக்டர் றஞ்சினி நவரத்தினசிங்கம் [கனடா], வின்சன்ற் யோஜ் அன்ரனிப்பிள்ளை [பொறியலாளர் கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு ரிறேரன் கோல்ரன் [பொறியியலாளர்-லண்டன்], திருமதி சித்திரா அன்ரனி பேட்றம் [கணக்காளர் - கனடா], திரு. சந்தியாப்பிள்ளை ஞானசேகரம் [மாவட்ட மருந்தாளர்-கம்பஹா, கொழும்பு], திரு. வேலுப்பிள்ளை நவரத்தினசிங்கம் [கனடா], திருமதி மங்களா வின்சன்ட் யோர்ஜ் [பட்டதாரி-கனடா] ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரது பூதவுடல் பெரியவிளான் இளவாலையைச் சேர்ந்த சட்டத்தரணி திருமதி றெஜீனா ரிறேரன் அவர்களின் இல்லத்திலிருந்து எதிர்வரும் திங்கட்கிழமை [4-3-91] மாலை மூன்று மணிக்கு புனித யுவானியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செலப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி றெஜீனா ரிறேரன்
[சட்டத்தரணி]

பெரியவிளான்,
இளவாலை. [16020]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மடு புகட்டும் பாடம்

மடுவில் உள்ள அகதிகள் முகாமை வேறு இடத்திற்கு மாற்றுவதற்குத் தாம் அனுமதிக்கப் போவதில்லை என்று ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தானிகராலயத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி திரு. டபிள்யு. டி. கிளாரன்ஸ் தெரிவித்திருக்கிறார்.

இவ் விடயத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் போராடி, வாதிட்டு திரு. கிளாரன்ஸ் வெற்றி காண்பாரானால் அவர் பெரும் சாதனையை நிலை நாட்டியவராகக் கருதப்படுவார். அவருக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என நாம் விரும்புகின்றோம்.

மடுவில் உள்ள அகதி முகாமை ஐ. நா. ஸ்தானிகராலயம் முழுதாகப் பராமரித்து வருகிறது. அது தமக்குப் பாதுகாப்பானது என்று கருதி 20,000க்கும் மேற்பட்ட அகதிகள் அங்கு தங்கியிருக்கிறார்கள். மனிதாபிமான ரீதியில் ஐ. நா. ஸ்தானிகராலயம் அகதிகளுக்குச் செய்யும் உதவி கிடைக்கக் கூடாது என்ற முனைப்புடன் அரசு செயற்படுகிறது.

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் போன்ற தொண்டர் நிறுவனங்கள் இங்கு இருப்பதாலேயே, தனது மனித உரிமைக்கு முரணான நடவடிக்கைகள் குறித்துவெளி உலகுக்குத் தெரியவருகிறது என்று அரசு நினைக்கிறது. அதனால் வடக்கு—கிழக்கில் அவற்றின் சேவையைத் தடுத்துவிடவேண்டும் என்று அது திட்டமிட்டிருக்க வேண்டும். அந்தத் திட்டத்தின் ஓர் அம்சமே மடு அகதி முகாமை மூடும் முடிவு என்று எண்ண வேண்டி உள்ளது.

அரசு நடத்தும் அகதி முகாம்களில் தங்களது பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை என்பது தமிழர்களின் பல வருட கால நிலைப்பாடு. இப்போது வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனம் அதுவும் உலகசபையான ஐ. நா. வின் ஒரு பிரிவு நடத்தும் அகதி முகாமிலும் தமிழருக்குப் பாதுகாப்பும், மனிதாபிமான உதவி கிடைக்கும் வசதியும் இல்லை என்ற நிலையும் உருவாகி உள்ளது. திரு. கிளாரன்ஸ் தமது போராட்டத்தில் தோற்பாரானால் அது உறுதி செய்யப்பட்டுவிடும்.

இங்கிருந்து தமிழ்நாட்டுக்கு அகதிகளாகச் சென்றவர்களும் அங்கு பெரும் கஷ்டமுறுகிறார்கள். அவர்கள் எதிர்பார்த்துச் சென்றது போல வசதிகள் உதவிகள் இல்லை. ஏன் இங்கு வந்தோம். சொந்த மண்ணில் கிடந்து மடிந்திருந்தாலும் பரவாயில்லை என்று பலரும் ஏங்கும் நிலை இப்போது அங்கு உருவாகி வருவதாக உள்ளார்ந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவை எல்லாம் எதனை எடுத்துக் காட்டுகின்றன? தமிழர்கள் தங்களுக்கு உரிய பாதுகாப்பைத் தாமே தேடிக் கொள்ள வேண்டும் என்பதையே. தன் கையே தனக்கு உதவி என்பதை உணர வேண்டும் என்பதையே புகட்டுவதாக உள்ளது.

இதனை அகதிகளாகிவிட்ட தமிழர்கள் மட்டுமன்றி, எல்லாத் தமிழர்களும் பூரணமாக உணர்ந்து கொள்ளுதல் அவசியம்.

# தமிழ்ப் பகுதிகளுக்குப் போதுமான பம்பாய் வெங்காயமே உற்பத்தி

## மிகுதிக் காணிகளில் சிறுதானியம்

அராலி, மார்ச் 3

தமிழீழப் பகுதிகளுக்குத் தேவையான அளவு பம்பாய் வெங்காயம் மட்டுமே இம்முறை அராலியில் உற்பத்தி செய்யப்பட இருக்கிறது.

மிகுதிக் காணிகளில் உப உணவுப் பயிர்களை செய்கை பண்ணும் நடவடிக்கைகளை அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு. நா. குகராசா மேற்கொண்டு வருகிறார்.

இதன் பிரகாரம் தேவையான பம்பாய் வெங்காயத்தின் அளவை பெறுவதற்கும் மேலதிகக் காணிகளில் பயிரிடுவதற்கு தேவையான பயறு, கௌபி, குரக்கன் போன்ற சிறு தானியங்களை தமிழீழ ஆய்வு நிறுவனம் மூலம் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. [இ-12]

## பருத்தித்துறையிலும் பேரணி

வடமராட்சி, மார்ச் 3

வங்காலை அதிபர்கள், ஆசிரியர்கள் படுகொலைகளைக் கண்டித்தும், பொதுப் பரீட்சைகளை இந்த மண்ணிலேயே நடத்துமாறு கோரியும் நடத்தப்பட்ட பேரணியில் வடமராட்சியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம் மாலிசந்தி, மந்திகையூடாக வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகத்தை அடைந்தது.

மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளால் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. தம்பிப்பிள்ளை, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர், திரு. ஜயாத்துரை, வடமராட்சிக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. பொ வீரபத்திரன் ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு, பொ. வீரபத்திரன் உட்படப் பலர் உரையாற்றினார்கள். [இ]

## உயர்நிலை தரத்துக்கு 7 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 3

நிர்வாகசேவை முதலாம் வகுப்பில் பணிபுரிந்த அனுபவம் முதிர்ந்த 168பேர் உயர்நிலை [சுப்றா] தரத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் இந்த வகையில் மொத்தம் ஏழு பேருக்கு உயர்நிலைத் தரப் பதவிகள் கிடைத்துள்ளன.

யாழ். செயலகத்தைச் சேர்ந்த மூவர் கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த மூவர், கலால் பகுதியைச் சேர்ந்த ஒருவர் ஆகிய எழுவருமே உயர்நிலை தரத்துக்குத் தெரிவாகி உள்ளனர், [அ-30]

## ஷெல் தாக்குதல்

காங்கேசன்துறை, மார்ச் 3

மாவிட்டபுரம், கொல்லன் கலட்டி, வீமன்காமம், கட்டுவன் பகுதிகளில் கடந்த சில தினங்களாக இடை இடையே துப்பாக்கி வேட்டுக்களும், ஷெல் தாக்குதல்களும் இடம்பெறுகின்றன.

இதனால் அந்தப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் தமது குடியிருப்புக்களை சென்று பார்வையிட முடியாத நிலை உருவாகியுள்ளது. [இ - 68]

## பஸ்ராவில் அராஜகம்

★ ஈராக் துறைமுக நகரான பஸ்ராவில் அராஜகம் தலை விரித்தாடுவதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

ஜனாதிபதி சதாம் ஹுசேனுக்கு எதிராக பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கைகள் அங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று லண்டனில் இருந்து வெளிபாகும் எகானொமிக் டைம்ஸ், டெய்லி ரெலிகிராப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

ஆளும் பாத் சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் பலரும் ஈராக்கிய படைகளைச் சேர்ந்த பலரும் நாட்டை விட்டுத்தப்பி ஓடிவிட்டனர் என்று அப்பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன.

ஈரர்க்கியப் படையினர் பலர் பஸ்ராவில் இடம்பெற்ற சதாம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர் என்றும் அச்செய்திகள் தெரிவித்தன.

## சகல எண்ணெய் வயல்களும் குண்டு வைத்துத் தகர்ப்பு

குவைத்தில் உள்ள சகல எண்ணெய் வயல்களும் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன என்று நிபுணர்கள் தெரிவித்தனர்.

தற்போதைக்கு குவைத்தினால் எண்ணெய் ஏற்றுமதியில் ஈடுபட முடியாது என்றும் எப்போது எண்ணெய் ஏற்றுமதி மீண்டும் ஆரம்பமாகும் என்பதைச் சொல்லமுடியாது என்றும் அந்த நிபுணர்கள் தெரிவித்தனர்.

## வேட்டுச் சத்தம் ஓயவில்லை

குவைத்தின் சில பகுதிகளிலும் ஈராக்கின் தென்பகுதியில் சில இடங்களிலும் ஈராக்கிய படைகளுக்கும் பன்னாட்டுப் படையினருக்கும் இடையே அங்கும் இங்குமாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன என்று அறிவிக்கப்பட்டது.

# வான் வியூகம் அமைத்துக் குண்டுத் தாக்குதல்

### வல்லைப் புயல்

பகுதி ஒன்பது

### வல்லை ந. அனந்தராஜ்

[முந்திய தொடர்ச்சி]

இரண்டாம் நாள் 21 ஆம் திகதி திங்கட்கிழமை......

அரசாங்கம் உத்தியோக பூர்வமாகவே யாழ் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டத்தை வானொலி மூலம்அறிவித்தது.

வல்லையில் அன்றும் காலை 6–15 மணிக்குத் தொடங்கிய குண்டு வீச்சுத் தாக்குதல்கள் பிற்பகல் 5-45 மணி வரை தொடர்ந்தன.

இரண்டாம் நாள் மட்டும் 78 குண்டுகள் வரை போடப்பட்டன— இக்குண்டுகளில் பெரும்பாலானவை பாடசாலைகள், ஆலயங்கள், பொதுமக்களின் குடியிருப்புக்களை நோக்கியே போடப்டன.

வழமையாக என்றுமே கலகலப்பாக இருக்கும் வல்வெட்டித்துறை இரண்டாம் நாளன்று சோபை இழந்து ஆள் நடமாட்டமின்றியே இருந்தது.

வீடுகளில் விட்டுச் சென்ற நாய்கள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன!

கோயில்களில் மணியோசை கேட்கவில்லை!

ஐம்புலன்களும் அடங்கிய நிலையில் அந்த அழகிய வல்வை மாநகர் மயான அமைதியில் தூங்கி வழிந்து கொண்டிருந்தது.

மூன்றாம் நாள் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை......

அன்றும் 6–30 மணிக்கே, வழமைபோல் போர் விமானங்களும், அவ்ரோ, வை–12 விமானங்களும், உலங்கு வானூர்திகளும் பாரிய குண்டுகளைப் பொழிந்து நகரைச் சங்காரம் செய்வதற்கு 'வான் வியூகம்' அமைத்து [illegible]

இந்த நிலையில் எவரும் ஊரைவிட்டு வெளியேறவோ, வெளியில் இருந்து உள்ளே வரவோ முடியாதபடி விமானங்கள் குண்டுகளைப் பொழிய. உலங்கு வானூர்திகள் 50 கலிபர், றொக்கட், ஆகியவற்றினால் எழுந்தமானமாகத் தாக்கிக் கொண்டிருந்தன.

அவ்ரோ விமானங்களில் இருந்து எரிகுண்டுகள் போடப்பட்டுக் கொண்டிருந்ததால், வானமண்டலம் எங்கும் ஒரே கரும்புகை மண்டலமாக இருந்தது!

### வல்வை மண்மீது 229 குண்டுகள்

மூன்றாம் நாளில் 58 குண்டுகள் போடப்பட்டன!

மீண்டும் நான்காம் நாள் 23ஆம் திகதி புதன்கிழமை இதேபோன்று காலை 6–30 மணி தொடக்கம், நண்பகல் 12–45 மணி வரை தொடர்ச்சியாக வான் குண்டு வீச்சுக்கள் நடைபெற்றன,

அன்று 20 குண்டுகள் வரை போடப்பட்டன! இந்த நான்கு நாட்களும் மொத்தம் 229 குண்டுகள் போடப்பட்டன. இவற்றுள் வெடிக்காதவை 23 குண்டுகள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களை அரசியல் ரீதியாகவோ, இராணுவ ரீதியாகவோ வெற்றி கொள்ள முடியவில்லை என்ற மன உளைச்சலின் வெளிப்பாடாகவே ஸ்ரீலங்காவின் இந்தப் புயல் நடவடிக்கை அமைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி திரு. பிரபாகரன் அவர்களைச் சந்தித்த பொழுது—

''நான் பிறந்த ஊருக்கே இந்தக் கதியென்றால், என் [illegible] கோபம் இருக்கும்...'' என்று அவர் தனக்கே உரிய பாணியில் சிரித்துக் கொண்டு கூறினார்.

அவ்வேளை எங்களுடன் வந்த ஒருவர்—

''இந்தத் தலைவனுக்காக... எங்கள் வீடுகளையென்ன எங்கடை உயிரையே கொடுக்க நாம் தயார்...'' என்று மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அவர் கூறியதைக் கேட்டதும் என் உரோமங்கள் சிலிர்த்தன.

### சென். செபஸ்தியார் தேவாலயம்

முதலாவது நாள்...... 3–45 மணிக்கு, வல்வெட்டித் துறைச் சந்தியில் உள்ள புனித செபஸ்தியார் தேவாலயத்தை நோக்கி வை–12 சகடை விமானத்தில் இருந்து ஏவப்பட்ட பாரிய குண்டு ஆலயத்தின் முன்னால் விழுந்து வெடித்ததில் ஆறு அடி ஆழமான பெரிய குழி ஏற்பட்டது. அதில் இருந்து வெடித்துச் சிதறிய துண்டுகள் தேவாலயத்தின் பலிபீடம், நற்கருணைப் பாத்திரம், கூரை ஓடுகள், திருச்சொரூபம் பவனி வரும் கூடு, கொடிக்கம்பம் ஆகியவற்றைச் சேதமாக்கின.

ஆலயத்தின் உள்ளே ஓட்டுச் சிதறல்களும், கண்ணாடித் துண்டுகளும், கொடிச் சீலைகளும் சிதறி இருந்தன. பலிபீடத்திற்கு அப்பால் உள்ள சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதரின் திருச் சொரூபத்தைப் பார்த்தபடியே கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த ரஞ்சிதன் என்ற சிறுவன் என்னைக்கண்டதும்,

'ஐயா! ...பாவிகளுக்காகக் கர்த்தர் சிலுவையைச்சுமந்து மற்றவர் துன்பத்தைத் தானே ஏற்றுக்கொண்டார்... இன்று எங்கள் கர்த்தர், இந்தப் பாவிகளின் குண்டைத் தன் தலையில் தாங்கிக் கொண்டிருக்கின்றார்.''

கண்ணீரைத் துடைத்துக் கொண்டே அந்தச் சிறுவன் கூறியதும், எனக்கும் கண்கள் கலங்கின. அந்த ஆலயத்தின் வருடாந்தத் திருநாளின் இறுதி நாள், அன்று காலை தான் அமைதியாகவும், ஆடம்பரமின்றியும் முடிவடைந்திருந்தது. இங்கு விழுந்த குண்டு நான்கு மணித்தியாலம் முன்னர் போடப்பட்டிருந்தால் சுமார் 75 பேராவது கொல்லப்பட்டிருப்பார்கள்.

இந்தக் குண்டின் தாக்கம் அருகில் உள்ள கிராமசேவையாளரின் அலுவலகத்தையும் வீட்டையும் முற்றாகவே சேதப்படுத்தியிருந்தது.

தேவாலயத்தின் முன்னால் இருந்த மரக்கறிச் சந்தை முற்றாகவே நிர்மூலமாக்கப்பட்டிருந்தது. அதன் அருகேயுள்ள நவீன சந்தைக் கட்டடத்தின் எல்லாக் கடைகளினதும், பாரிய இரும்புக் கதவுகள் குண்டுகளின் அகோரத் தாக்குதலினால் உடைந்து சின்னா பின்னாப் பட்டிருந்தன.

வல்லையின் உருக்குலைந்து போன அந்தப் பிரமாண்டமான சந்தைக் கட்டடத்தையும் கடந்து, சந்தியின் மூன்று பிரதான சாலைகளையும் பார்த்து உறுமுவது போல் அமைக்கப்பட்டிருந்த மூன்று புலிச் சின்னங்களின் அருகே சென்று அவற்றைத் தடவிப் பார்த்தேன்... என்ன ஆச்சரியம், அவை எவ்வித சேதமும் இன்றி அப்படியே பளபளப்பாக இருந்தன.

[வளரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேமாவின் வலது கை

காலஞ்சென்ற அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தமது இளம் வயதில் உதவித் தோட்டத்துரையாக தொழிலை ஆரம்பித்தவர். சில வருடங்களில் தோட்டத் துரையாகப் பதவியில் உயர்ந்தார். 1970 களின் முற்பகுதியில் தோட்டத்துரைமார் சங்கத் தலைவராகவும் பணிபுரிந்தார்.

17 ஆவது வயதில் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொண்டார். 1977 பொதுத் தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் தேர்தல் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டார். அதன் பொருட்டு ஜே. ஆர். பிரதமராக இருந்த காலத்தில் விவசாய அபிவிருத்தி சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். பின்னர் விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரானார். காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராகவும் பணிபுரிந்திருக்கிறார்.

1988 இறுதியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தீவிரமாக உழைத்தவர் ரஞ்சன். அதே ஆண்டு நடுப்பகுதியில் ஐ. தே. க. தலைவராக இருந்த திரு. ஹர்சா அபயவர்த்தனா சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார். திரு. பிரேமதாசாவின் வெற்றிக்கு உழைத்ததால் அவரின் நம்பிக்கைக்கு உரியவர்களில் ஒருவரானார். அவரின் வலது கையானார். இறக்கும்போது ஐ. தே. க. வின் பொதுச்செயலாளராகப் பதவி வகித்தார்.

தேசிய பட்டியல் மூலம் எம்.பியாக பதவியேற்ற ரஞ்சன், முதலாவது அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராகவும், பாதுகாப்புத் துணை அமைச்சராகவும் பதவியேற்றார். பின்னர் அமைச்சரவை மாற்றி அமைக்கப்பட்டபோது பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சரானார். தொடர்ந்து பாதுகாப்புத் துணை அமைச்சராகவும் பணிபுரிந்தார்.

பாதுகாப்புத் துணை அமைச்சர் என்ற வகையில் 1989 ஆம் ஆண்டில் ஜே.வி.பிக்கு எதிரான நடவடிக்கையை முன்னின்று முடுக்கி விட்டவர்.

வடக்கு-கிழக்கில் இப்போது நடக்கும் யுத்தத்தில் பாதுகாப்புப் படைகளை நேற்றுக் காலை வரை வழிநடத்தி வந்தவரும் காலஞ்சென்ற ரஞ்சனே.

இலங்கையின் முதல் பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவின் ஒன்றுவிட்ட சகோதரியின் மகனான ரஞ்சன், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆருக்கும் நெருங்கிய உறவினர் ஆவார். இன்னும் ஒரு மாதத்தில் அவருக்கு 60 வயது பூர்த்தியாகிறது. [அ]

# இந்தியா கண்டனம்!

அமைச்சர் விஜேரத்தினா கொலை செய்யப்பட்டதை இந்தியா நேற்று வன்மையாகக் கண்டித்தது.

இச் செயல் கோழைத்தனமானது; அறிவீனமானது என்றும் இந்திய அரசு தெரிவித்தது.

இது தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்பிய இரங்கல் செய்தியில் இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தமது ஆழ்ந்த அதிர்ச்சியைத் தெரிவித்தார்.

## உயிரிழந்தோர்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உயிரிழந்தோர் 29 ஆக இருக்கலாம் என்று காலையில் அறிவித்த பி. பி. ஸி, மாலை ஒலிபரப்பில் அமைச்சர் ரஞ்சன் உட்பட 19 பேர் மரணமானார்கள் என்று அறியவருவதாகக் கூறியது.

அமைச்சர் ரஞ்சனுடன் விசேட அதிரடி பொலீஸ் பிரிவைச் சேர்ந்த ஐவரும், கடற்படை அதிகாரி ஒருவரும் மற்றும் 11 பேரும் உயிரிழந்ததாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

நேற்றிரவு வரை உயிரிழந்தோர் குறித்து மேலும் தகவல்கள் வந்து கொண்டே இருந்தன.

ஏ. எப். பி செய்தி ஸ்தாபனம் குண்டு வெடிப்பில் 30 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவித்தது. [ஒ]

## ரஞ்சனின்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சரின் பாதுகாப்புக்காகச் சென்றுகொண்டிருந்த 4 பொலீஸ் அதிகாரிகள் உட்பட 30 பேர் உயிரிழந்தனர் என்று இராணுவ உயர் அதிகாரிகள் கூறினர்.

மேலும் வீதியில் சென்றுகொண்டிருந்த பொலீஸ் ஜீப்கள் மற்றும் பஸ்கள் உட்பட ஏழு வாகனங்கள் தீப்பற்றி எரிந்தன என்று பார்வையாளர்கள் தெரிவித்தனர். [உ-எ]


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

நயினாதீவு

அமரர் சிவக்கொழுந்து பரமலிங்கம்

தோற்றம்: 18 05-1909 மறைவு: 01-02-1991

ஆண்டு பிரமோதூத ஆவமாசி பத்தொன்ப[து]
தூண்டு அபரத்துத் திருதியையில் — நீண்டபுகழ்
சீரார் சிவக்கொழுந்து சென்றடைந்தாள் சேந்தனடி
ஆராப் பெரு மின்பமாம்.

அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும், நிழலாக எம் நினைவோடு உறவாடும் உங்கள் பசுமையான பாசத்தை எண்ணி வாழ்கிறோம். அன்னாரின் ஆத்மசாந்திக்கான பிரார்த்தனையும், சபிண்டீகரண வைபவமும் 03-03-91 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மருகர், மகள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

571, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். [16022]


# கல்வியங்காடு குண்டு வீச்சில்

# பாடசாலை பெரும் சேதம்

## கட்டப்பிராயில் 2 பெண்கள் காயம்

கோப்பாய், மார்ச். 3

கல்வியங்காடு, கட்டப்பிராய்ப் பகுதிகளில் நேற்றுப் பகல் 2. 45 மணியளவில் 3 பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

கல்வியங்காடு [நல்லூர்] சந்தைக்கு சமீபமாகவுள்ள— சாசிப்பிள்ளை வித்தியாலயத்தின் மீது வீசப்பட்ட குண்டினால் பாடசாலை கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்து அங்கிருந்த தளபாடங்கள் நாசமாகின. அருகில் இருந்த சில வீடுகளும் ஓரளவு சேதமாகின.

6 ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கு வந்திருந்த மாணவர்கள் அருகிலுள்ள வீடு ஒன்றின் பதுங்கு குழிக்குள் சென்றதால், தப்பி விட்டனர்.

கல்வியங்காடு சந்திக்குச் சமீபமாக — கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு பின்புறமாகவுள்ள — தென்னங்காணி ஒன்றிலும் குண்டு விழுந்து வெடித்தது. இதனால் தென்னை மரங்கள் முறிந்து விழுந்தன.

கட்டைப்பிராய் கலைமணி வீதியில் வீசப்பட்ட குண்டினால் இரண்டு வீடுகள் சேதமுற்றன. இரு பெண்கள் காயமுற்றனர்.

கட்டப்பிராயைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியை கணபதிப்பிள்ளை நாகம்மா [80 வயது], கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவியான மன்னாரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை திலகவதி [28 வயது] ஆகியோரே காயமடைந்தனர்.

கலைமணி வீதியைச் சேர்ந்த சிலர், தமது வீடுகளில் இருந்து ஓடி கோயிலுக்கு அருகிலுள்ள காணி ஒன்றில் நிலத்தில் விழுந்து படுத்துப் பாதுகாப்புத் தேடிக் கொண்டனர். [ஒ-5-15-72]

## தமிழ் மீனவரின் வலைகள் அபகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3

மூதூர் இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் சேர்ந்து சுடற்கரைச் சேனையில் தமிழ் மீனவர்களின் சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளை அபகரித்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## வல்லையில் ஹெலி சூடு!

யாழ்ப்பாணம், மார்ச் 3

வல்லை வெளிப்பகுதியில் வீதியில் சென்ற வாகனங்களை நோக்கி நேற்று நண்பகல் ஹெலி தாக்குதல் நடத்தியது.

இதேவேளை மிருசுவில் பகுதியில் ஹெலியிலிருந்து பிரசுரங்களும் வீசப்பட்டதாகத் தெரியவருகிறது. [ஒ-5]

## வவுனியாவில் அத்துமீறல்

யாழ்ப்பாணம், மார்ச் 3

வவுனியா நகரில் நேற்று முன்தினம் காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பொதுமக்களை தமிழ் இயக்கம் ஒன்றின் உறுப்பினர்கள் அடித்துத் துன்புறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## கப்டன் ரஹீம் வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

நேற்று முன்தினம் மாலை 4. 30 மணியளவில் வீமன்காமம் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கப்டன் ரஹீம் - [கருணாகரன் -அராலி தெற்கு] வீரமரணமடைந்தார்.

★

கடந்த மாதம் 22 ஆம் திகதி ஆனையிறவுப்பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த பெண் போராளியான லெப்டினட் சுதாங்கனி [தில்லையம்பலம் சுதா-வட்டக்கச்சி] நேற்று வீரமரணமடைந்தார். [ஒ-5]

## மரண தண்டனை

யாழ்ப்பாணம், மார்ச்3

வவுனியா, பம்பைமடு காட்டுக்குள் வயோதிபப் பெண் ஒருவரை மானபங்கப்படுத்தியதாகக் கூறப்படும் சுந்தரலிங்கம் என்பவருக்கு நொச்சிமோட்டை, பேயாடி கூழாங்குளத்தில் வைத்து அண்மையில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. [ஒ]

## விசாரணை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அமைதி காத்து, விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி ஜனாதிபதி பொது மக்களைக் கேட்டுக் கொண்டார்.

குழப்பங்களை ஏற்படுத்த முயலும் சக்திகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர தீவிர முயற்சிகளை எடுக்கும்படி [illegible] அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## கோண்டாவிலில் மூவர்காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

நேற்றுக்காலை 9. 15 மணியளவில் கோண்டாவில் மேற்கில் இடம் பெற்ற விமானக் குண்டுவீச்சில் மூவர் காயமடைந்தனர். ஆறு வீடுகள் பலத்த சேதம் அடைந்தன.

இப் பகுதியில் இரண்டு குண்டுகள் வீசப்பட்டன.

இச் சம்பவத்தில் சுப்பு சுந்தரம் [வயது 60], சுப்பிரமணியம் செல்வமணி [வயது 50], சுப்பிரமணியம் இரத்தினம்மா [வயது 60] ஆகிய மூவருமே காயமடைந்தனர்.

இவர்கள் மூவரும் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். [உ-143-15-69]

## வலி. வடக்கிலும்.....!

வலி. வடக்கில் — வீமன்காமம், கட்டுவன், ஏழாலை, கொல்லன்கலட்டி, மாவிட்டபுரம் பகுதிகளிலும் நேற்று முற்பகல் 10 மணி தொடக்கம் பொம்மர்கள் குண்டு வீச்சுக்களை நடத்தின.

இப்பகுதிகளில் காலை 7 மணியளவில் ஹெலித் தாக்குதலும் நடந்தது. அதே சமயம் ஷெல் வீச்சுக்களும் இடம் பெற்றன,

இதேவேளை — ஏழாலை, குப்பிளான், மயிலங்காடு பகுதிகளில் நடத்தப்பட்ட குண்டு வீச்சில் வீடுகள் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-68-15]

## குண்டு....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்து கொண்டிருந்த அனைவரும் உயிரிழந்தனர்.

அரசாங்கத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சரே நட்டநடு வீதியில் சக்தி மிகு குண்டு வெடிப்புக்கு இலக்காகி உயிரிழந்தது படை வட்டாரங்களிலும் அரசு வட்டாரங்களிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. [உ-எ]

## இன்று

யாழ்ப்பாணம், மார்ச். 3

உடுவில் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர்களுக்கான சந்திப்பு ஒன்று, இன்று பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது. [ஒ]

★ ★ ★

யாழ். மாவட்ட திரிசாரணர்களின் பிரயாண நட்சத்திரத்திற்கான சைக்கிள் சுற்றுப் பயணம் ஒன்றை நல்லூர் திரிசாரணர் குழுவைச் சேர்ந்த 9 திரிசாரணர்கள் இன்று மாலை 3 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பிக்கவுள்ளனர். [ஒ-5]

★ ★ ★

யாழ். பிரதான வீதி திருமறைக் கலா மன்றக் கலையரங்கில் இன்று மாலை 6 மணிக்கு ''அனைத்தும் அவரே,, என்னும் தவக்கால சிந்தனைகளைக் கொண்ட நாட்டுக் கூத்து நடைபெற இருக்கிறது. [ஒ-51]


## மரண அறிவித்தல்

### திருமதி அருளம்பலம் செல்லம்மா

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியினைச் சேர்ந்த திருமதி அருளம்பலம் செல்லம்மா 2-3-1991இல் காலமாகிவிட்டார். இவர் திரு. க. அருளம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், திரு. செல்வராசா [பிரபல வெற்றிலை வியாபாரி, சாவகச்சேரி சந்தை]. திருமதி சச்சிதானந்தம் சாரதாதேவி, திரு செல்வரத்தினம், திரு. நவரத்தினம் [இ. போ. ச. பருத்தித்துறை]. திருமதி சிவனேசன் நவமலர் [டென்மார்க்], காலம் சென்ற லோகநாதன் [நாவற்குழி வெடி விபத்தில் மரணமாகிய மாவீரன் அக்பர்], காலம் சென்ற குகபாலன் [மாவீரன் குட்டி அக்பர்], சண்முகநாதன் [நவீல் பாடசாலை, கைதடி], சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி பத்மினி, திரு. சச்சிதானந்தம் [பொதுமுகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், பளை], திருமதிகள் ஜெகதாம்பாள், நாகராணி, திரு. சிவனேசன் [டென்மார்க்] ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று மாலை 4 மணியளவில் நடைபெற்று குச்சம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : திரு. அ. செல்வராசா [மகன்]

[15686]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org